**சுருக்கம்**

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள புளோரைடால் பாதிக்கப்பட்ட நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரக குடியிருப்புகளுக்கான ஒகேனக்கல் குடிநீர் விநியோகம் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்புத் திட்டம் - தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பல்வேறு பதவிகளை உருவாக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ4) துறை**

அரசாணை (நிலை) எண்.21 நாள்:**19.2.2009.**

மாசி 7, திருவள்ளுவர் ஆண்டு 2040,

படிக்க :-

1. அரசாணை (நிலை) எண்.26, ந.நி.(ம)கு.வ. (குவ4)துறை, நாள் 25.2.08
2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை.5 அவர்களின் கடித எண். WCE3/006205/08 நாள்**30.10.2008.**
3. திட்ட இயக்குநர், ஒகேனக்கல் குடிநீர் விநியோகம் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்பு திட்டம் சென்னை.5 அவர்களின் கடித எண். WCE3/006205/08 நாள் **21.1.2009.**

****

**ஆணை:**

முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள் மற்றும் 18 ஊராட்சிகளைச் சேர்ந்த 6755 ஊரக, குடியிருப்புகளுக்கு குடிநீர் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்பு திட்டத்திற்கு ரூ.1334/- கோடி, அமைப்பு செலவிலும், ரூ.51.65 கோடி, ஆண்டு பராமரிப்பு செலவிலும் ஜப்பான் வங்கி கடனுதவியுடன் செயல்படுத்த உத்தேசித்து ஒகேனக்கல் குடிநீர் விநியோகம் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்பு திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிட்டது. அதனைத் தொடர்ந்து, திட்ட வேலைகளை கண்காணிப்பதற்கு வாரிய தலைமை அலுவலகத்திலும், திட்ட செயலாக்க அலுவலகத்திலும் குறிப்பிட்ட காலத்திற்குள் திட்டத்தை முடிப்பதற்கும் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தனியார் அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்கள் நியமித்தல் தொடர்பாக 28.5.2008 அன்று நடைபெற்ற வாரிய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் 71 எண்ணிக்கை பதவிகளை உருவாக்கிடவும், 131 எண்ணிக்கையிலான ஊட்டு வகை பதவிகளுக்கு ஆட்களை தேர்வு செய்வதற்கும் இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பினார்.

2. அதன் பின்னர் மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் ஒகேனக்கல் குடிநீர் விநியோகம் (மற்றும்) புளோரைடு பாதிப்பு குறைப்பு திட்ட இயக்குநர் கீழ்க்கண்ட பணியிடங்கள் உருவாக்கிட கீழ்க்கண்டவாறு ஒரு திருந்திய கருத்துரு அனுப்பினார்.

| வ. எண் | பதவி மற்றும் ஊதிய விகிதம் | திட்ட மேலாண்மை கலந்தாலோசகர் பிரிவு (PMU) | திட்ட செயலாக்க பிரிவு (PIU) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | தலைமை பொறியாளர் (ரூ. 16400–450–20000) | –– | 1 | 1 |
| 2. | மேற்பார்வை பொறியாளர் (ரூ.14300–400–18300) | –– | 1 | 1 |
| 3. | செயற் பொறியாளர் (ரூ.10000–325–15200) | 1 | 5 | 6 |
| 4. | உதவி செயற் பொறியாளர் (ரூ.8000–275–13500) | 2 | 13 | 15 |
| 5. | தலைமைவரைவுஅலுவலர் (ரூ.9100–275–14050) | –– | 1 | 1 |
| 6. | சிறப்பு வரைவு அலுவலர் (ரூ.8000–275–13500) | 1 | –– | 1 |
| 7. | முதுநிலை வரைவு அலுவலர் (ரூ.6500–200–10500) | –– | 1 | 1 |
| 8. | வரைவு அலுவலர் (ரூ.5500–175–9000) | –– | 2 | 2 |
| 9. | கணக்கு அலுவலர் (ரூ.8000–275–13500) | –– | 1 | 1 |
| 10. | உதவி கணக்கு அலுவலர் (ரூ.6500–200–10300) | 1 | –– | 1 |
| 11. | ஆட்சி அலுவலர் (ரூ.8000–275–13500) | –– | 1 | 1 |
| 12. | பதிவுரு எழுத்தர் (ரூ.3050–75–3950–80–4590) | –– | 1 | 1 |
| | **மொத்தம்** | 5 | 27 | 32 |

மேலும் திட்ட இயக்குநர், மேற்கண்ட பதவிகளை திட்ட வடிவமைப்பு (மற்றும்) தேவைகளுக்கேற்ப பல நிலைகளில் (Phased Manner) நிரப்பிக் கொள்ளப்படும் என்றும், இப்பதவிகள் அயற்பணி (மற்றும்) மறு வேலைவாய்ப்பு அடிப்படையிலும் நிரப்பப்படும் என்றும், இப்புதிய பதவிகள் திட்டம் முடியும் வரை (2013ஆம் ஆண்டு வரை) மட்டுமே கோரப்படும் என்றும், திட்டம் முடிவுற்றபின் இப்பணியாளர்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால்

வாரியத்தில் காலியாக உள்ள பதவிகளில் பணியமர்த்தப்படுவார்கள் என்றும் தெரிவித்தார். இவை தவிர, தலைமை அலுவலகம் மற்றும் திட்ட செயலாக்க அலகுகளில் வீட்டுப் பணிகள், காவல் பணிகள், பாதுகாப்பு பணிகள், வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் மற்றும் கணிப் பொறி இயக்குதல் ஆகியவைகளை வெளியாள் மூலம் (outsourcing) நிறைவேற்றிட அனுமதியும் கோரினார்.

3. மேலே பத்தி 2ல் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர் ஆகியோரின் கருத்துருக்களை அரசு கவனமாக ஆய்வு செய்து கீழ்கண்டவாறு புதிய பதவிகளை உருவாக்க அனுமதி அளித்து ஆணை பிறப்பிக்கின்றது. இதற்கேதுவாக அரசாணை (நிலை) எண். 27, நிதி (பிபிஈ) துறை நாள் 22.1.2002 ஐ தளர்த்தியும் அரசு ஆணையிடுகிறது :-

(அ) திட்ட மேலாண்மை கலந்தாலோசகர் பிரிவில் (PMU) 5 பதவிகளும், திட்ட செயலாக்க பிரிவில் 7 பதவிகளும் ஆக மொத்தம் 12 பதவிகளை கீழ்க்கண்டவாறு உருவாக்கலாம்.

| வ. எண் | பதவி மற்றும் ஊதிய விகிதம் | திட்டமேலாண்மை கலந்தாலோசகர்(PMU) பிரிவு | திட்ட செயலாக்க பிரிவு(PIU) | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | தலைமை பொறியாளர் (ரூ.16400–450–20000) | –– | 1 | 1 |
| 2. | மேற்பார்வை பொறியாளர் (ரூ.14300–400–18300) | –– | 1 | 1 |
| 3. | செயற் பொறியாளர் (ரூ.10000–325–15200) | 1 | - | 1 |
| 4. | உதவி செயற் பொறியாளர் (ரூ.8000–275–13500) | 2 | – | 2 |
| 5. | தலைமை வரைவு அலுவலர் (ரூ.9100–275–14050) | –– | 1 | 1 |
| 6. | சிறப்பு வரைவு அலுவலர் (ரூ.8000–275–13500) | 1 | –– | 1 |
| 7. | முதுநிலை வரைவு அலுவலர் (ரூ.6500–200–10500) | –– | 1 | 1 |
| 8. | கணக்கு அலுவலர் (ரூ.8000–275–13500) | –– | 1 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | உதவி கணக்கு அலுவலர் (ரூ.6500–200–10300) | 1 | –– | 1 |
| 10. | ஆட்சி அலுவலர் (ரூ.8000–275–13500) | –– | 1 | 1 |
| 11. | பதிவுரு எழுத்தர் ரூ.(3050–75–3950–80–4590) | –– | 1 | 1 |
| | மொத்தம் | 5 | 7 | 12 |

(ஆ) திட்ட செயலாக்க பிரிவில் ஒன்றுக்கு மேற்பட்ட செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் வரைவு அலுவலர் பதவிகளை கீழ்க்கண்டவாறு உருவாக்கலாம் :-

| வகைபாடு மற்றும் ஊதிய விகிதம் | திட்ட செயலாக்கப் பிரிவில் (PIU) கோரப்பட்ட மொத்த பணியிடம் | முதற் கட்டமாக 25% | இரண்டாம் கட்டமாக 50% | மூன்றாம் கட்டமாக 25% | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| <u>தொழிற் நுட்பம்</u><br>செயற்பொறியாளர் (EE)<br>ரூ.10000–325–15200) | 5 | 1 | 3 | 1 | 5 |
| உதவி செயற் பொறியளார் (AEE)<br>(ரூ.8000–275–13500) | 13 | 4 | 5 | 4 | 13 |
| வரைவு அலுவலர் (DO)<br>(ரூ.5500–175–9000) | 2 | –– | 1 | 1 | 2 |
| **மொத்தம்** | **20** | **5** | **9** | **6** | **20** |

(இ) மேலும், இத்திட்டம் முடிவுறும் பொழுது மேலே குறிப்பிட்டவாறு உருவாக்கப்பட்ட பதவிகளை எதிர்காலத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணி ஓய்வினால் ஏற்படும் காலியிடங்களில் சரிசெய்து கொள்ள வேண்டும்.

(ஈ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், வீட்டுப்பணி, காவல்பணி, வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் மற்றும் கணினி இயக்கிகளை வெளியாள் மூலம் நிரப்பிக் கொள்ள உத்தேசித்துள்ளது குறித்து விரிவாக ஆராய்ந்து ஒவ்வொரு இனத்திலும் உண்மையில் தேவையான நபர்கள், அவர்களை திட்ட காலத்தில் உபயோகித்துக் கொள்ளும் முறை மற்றும் எதிர்பார்க்கப்படும் நிதி செலவினம் ஆகிய விவரங்களை வாரியக் கூட்டத்தில் வைத்து தக்க முடிவு எடுத்துக் கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை அரசு அறிவுறுத்துகிறது.

5. இந்த ஆணை நிதி (BPE) துறை அ.சா. எண்.552/SS(PK)/08, நாள் 2.2.2009–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**//ஆளுநரின் ஆணைப்படி//**

**நிரஞ்சன் மார்டி,**
**அரசுச் செயலாளர்.**

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை–5.
முதன்மை கணக்காயர், சென்னை–18.
முதன்மை கணக்காயர், சென்னை–18. (பெயரில்)
முதன்மை கணக்காயர், (துணிக்கை), சென்னை–35.
முதன்மை கணக்காயர், (துணிக்கை), சென்னை–35(பெயரில்)
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்கு துறை, சென்னை–15
சம்பளக் கணக்கு அலுவலர்,சென்னை–9.
சம்பளக் கணக்கு அலுவலர், (வடக்கு) சென்னை–1.
சம்பளக் கணக்கு அலுவலர், (கிழக்கு) சென்னை–5
மாவட்ட கருவூல அலுவலர், தருமபுரி/கிருஷ்ணகிரி.
அரசு செயலர், நிதித்துறை, சென்னை–9.
அரசு செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, சென்னை–9.
அரசு செயலர், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9.
அரசு செயலர், பொதுப்பணித்துறை, சென்னை–9.
அரசு செயலர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5,
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–108.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை. சென்னை–6.
மாவட்ட ஆட்சியர், தருமபுரி.
மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி.

**<u>நகல்</u>:**
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கூடுதல் செயலாளர், சென்னை–9,
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதி ( நநிமகுவ/பிபிஈ) துறை, சென்னை–9.
பொது (நூலகம்) துறை, சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (கு.வ.I. II. III, ந.ப.I )துறை, சென்னை–9

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**